32

நயி[illegible]

மலர் 1 இதழ்

நவம்பர்

1937


JL
T: 3m 2116, N2
N 33.1.1.
148784.

"செய்து செய்து கற்றல்"

# நவீனக் கல்வி

மலர் 1. நவம்பர் 1937. இதழ் 1.

உள்ளுறை

24 NOV 1937 MADRAS

பக்கம்.

1. இப்பத்திரிகையின் நோக்கம். 1
2. பிராஜெக்ட் முறைப்படிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குச் சில புத்திமதிகள். 2
3. சந்தோஷம் நிறைந்த படிப்பு. 3
4. ஐந்தாவது சுய நோக்க முயற்சி வேனிற்காலப் பாடசாலையின் அறிக்கை. 6
5. ஒரே ஆசிரியர் நாலு வகுப்புகளைப் பிராஜெக்ட் முறைப்படி நடத்தவேண்டிய பாடசாலைதனில் அனுசரிக்க வேண்டிய முறைகள். 8
6. 3ம் 4ம் வகுப்புகளுக்குப் பிராஜெக்ட் நடத்தும் வழி. 12
7. 1ம் 2ம வகுப்புகளுக்கு ஊதி விளையாட்டுப் பாடம் 15

# செய்து செய்து கற்கும் கல்வி

1. செய்து செய்து கற்கும் கல்வி
செகத்தில் மிகச் சிறப்புள்ளதாம்,
சேயர்களை நேயமுடன் ஓயாமல் ஓதும் கல்வி (செ)
செப்பும் இக்கல்விக்கு ஏதும் ஒப்புமை தானுமுண்டோ,
அப்பனே இப்புவியினில் தப்பாமலே மெய்ப்பிடுவோம் (செ)

இப்படிக் கியைந்த கல்வி இருக்கின்ற தீரோட்டினில்
ஒப்புரவான கல்வி துப்புரவாமே தேர்வீர்;

எப்புவியிலுள்ளவரும் ஒப்புவாரிதன் னுயர்வை
எப்போதும் இலண்டன் மிஷன் ஈரோட்டின் போதனாசாலை (செ)

2. ஆரம்பப் பாடசாலையின்
அரும் பெரும் நோக்கம் அமைந்திடும்;
தாரதம்மியமில்லாமல் யாரும் கோரும் கல்வியே, (ஆ)
வாரும் இதன் மேன்மை கண்டு கூற நேரும் பாருமே,
தேரும் கல்விதனைத் தேடின் சேரும் சித்தம் உத்தமம், (ஆ)

பாரிலே நேரில் இதன் பான்மை கூறின் பல்குமே,
வேரில் சாரம் ஏறும் போல் வெகு விரைவில் கற்கலாம்

ஊரிலுள்ளோர் சீரியதாய் வாரிக்கொள்ளும் கல்வியே
சீரிய இலண்டன் மிஷன் சிறப்புடைப் போதனாசாலை,—(செ)

3. ஞானத்தின் வளர்ச்சியிலே
நாளும் நாதன் கிருபை
நம்பிவர் தயவினிலே செம்மை யாக்கும் கல்வியே, (ஞா)
ஆன இதன் ஞான வழி பான மௌனத் தேருவீர்;
நானா தேசத்தார்களுமே நாடித் தேடும் கல்வியே, (ஞா)

ஈன வழியை இகழ்ந்து மோன வழியை உகந்து
மான பண்பதைக் கொண்டு மாநிலத்திலே தொண்டு

நன்று புரிதற் சென்னும் கை கண்ட வழியிதுவே
இன்று நம் தாரணிக்கே தந்த இந்தச் சொந்தக் கல்வி—(செ)

K. J. V.

# இப்பத்திரிகையின் நோக்கம்

OFFICE OF THE REGISTRAR
24 NOV 1937
MADRAS

சில நாளைக்கு முன்னர் கோயம்பத்தூரில் கூடின ஆசிரியர் சங்கத்திற்கு முன்னிலையில் கல்வி இலாகா டைரக்டர் அவர்கள் பின்வருமாறு உரைத்தனர்:

"புதிய போதனாமுறைகளைக் கற்றறிந்த அநேக ஆசிரியர் அப்புதிய முறைகளை அனுசரிக்காமல் பழைய பாதைகளில் நடந்து கொண்டு போகிறார்கள் என்று நான் அறிவேன். ஆசிரியர்களுக்கு உற்சாகமில்லாமையால் அவ்வாறே செய்கிறார்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" என்பதே.

ஈரோடு லண்டன் மிஷன் கம்யூனிட்டி போதனாமுறைப் பாடசாலையில் பயின்றுவந்த ஆசிரியர் எல்லோரும் தாங்கள் கற்றுக்கொண்ட முறையையனுசரித்துப் பாடசாலை நடத்தும்படி அவர்களை ஏவிவிடவேண்டும் என்னும் நோக்கங்கொண்டு மீண்டும் இச்சிறு பத்திரிகை வெளியிடப் பெற்றது. ஆசிரியர்க்குத் தக்க உதவிபுரியவும், அவர்களுக்குப் புதிய ஊக்கம் உண்டாக்கவும் வேண்டும் என்று விருப்பமுற்று இச்சஞ்சிகை வெளியிட்டோம்.

புதிய பிராஜெக்ட் அட்டவணைகளையும் அதற்கேற்ற சில ஆலோசனைகளையும் ஆசிரியர் இதில் காணலாம். இவ்வருஷம் கோடைகாலத்தில் கூடின விசேஷித்த வகுப்பின் அறிக்கையும் வெளிவந்தது. நமது பழைய மாணவர் யாவரும் இச்சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ளச் சந்தாதாரராவார்கள் என்றும் நம்புகிறோம். இதற்கென்றே ஒரு பிரத்தியேகமான கடிதம் இதனுடன் அனுப்பப்பட்டது. இதைப்பூர்த்தி செய்து 6 அணா ஸ்டாம்பு போட்டு கீழ்க்கண்டவரிடம் அனுப்பினால் அவர்கள் ஒரு வருஷத்திற்குப் பத்திரிகை பெற்றுப் பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்தினராதல் கூடும். வாசிக்கும் ஆசிரியர் யாவரும் இவ்வாறே செய்து தங்கள் பழைய பாடசாலையின் ஆசிரியர்களை மகிழ்விப்பார்கள் என்று நம்புகிறோம்.

148784

# பிராஜெக்ட் முறைப்படி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குச் சில புத்திமதிகள்.

1. அனேக பாடசாலைகளில் முழுநேரத்தையும் பிராஜெக்ட் முறைப்படி நடத்தமுடியாதென்று சொல்லப்படுவதால் ஒவ்வொரு வாரத்திலும் ஒவ்வொரு வகுப்பிலும் சதாரண பாடங்களையும் பிராஜெக்ட்டுகளையும் மாறிமாறி நடத்தலாம் என்று உத்தேசம் தெரிவிக்கின்றோம். காலை நேரத்திலாவது மாலை நேரத்திலாவது பிராஜெக்ட் நடத்துவது நல்லது. ஒரு பாடநேரம் சாதாரணமாய் நாற்பது நிமிஷம் ஆகும். ஆகையால் ஒவ்வொரு வகுப்பிலும் வாரத்திற்கு நாலுமணி நேரமாக இத்தகைப் படிப்பு நடைபெறும். ஒவ்வொரு நாள் காலையில் இரண்டு வகுப்புகளை இவ்விதமாய் நடத்தலாம். மற்ற நேரங்களில் சாதாரணப் பாடங்களை நடத்துவதற்குச் சமயம் உண்டு. திங்கட்கிழமை மூன்றும் நான்காம் வகுப்புகளை நடத்தினால் செவ்வாய்க்கிழமை முதலாம் இரண்டாம் வகுப்புகளை நடத்தலாம். இக்காலத்தில் அவ்வகுப்புப் பிள்ளைகள் விஷயமுறையின்படிப் படிக்காமல் செய்கையின் மூலமாய்ப் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்கிறார்கள்.

2. பையன்கள் செய்யும் பிராஜெக்ட்டுகளின் குறிப்புகளையும் பாடச் சுருக்கத்தையும் அவர்களே தங்கள் நோட்டுகளில் எழுத வேண்டும். அல்லது ஒவ்வொரு பையனுக்கும் நோட்டில்லாத வகுப்புகளில் பொதுவாக ஒரு நோட்டுவைத்து அதில் சில பையன்கள் எழுதும்படி ஏற்பாடு செய்யலாம். முதலாம் வகுப்பிலும் ஆசிரியருடைய உதவியினாலே குறிப்புகள் எழுதலாம். நோட்டிலே இத்தகையான அறிக்கை இருப்பது அதிக முக்கியம்.

3. ஒரே ஆசிரியர் மூன்று நான்கு வகுப்புகளை நடத்த வேண்டிய பாடசாலைகளில் சில பிரத்யேகமான கஷ்டங்கள் இருக்கின்றன. இவைகளைப் பற்றிய சிலகுறிப்புகளை வெளியிடுகின்றோம். இரண்டு வகுப்புகளை ஒன்றாகப் படிப்பிக்கத் தக்க இரண்டு பிராஜெக்ட்டு அட்டவணைகள் இச்சஞ்சிகையில் காணப்படலாம். நாலு வகுப்புகளை ஒரே ஆசிரியர் நடத்த வேண்டிய பாடசாலைகளிலும் இவைகளை உபயோகிக்கலாம். எப்படியென்றால் ஒரு சமயத்தில் இரண்டு வகுப்புகளை நடத்தின பின் மற்றொரு சமயத்திலும் மறுஇரண்டு வகுப்புகளை நடத்தலாம். ஒரே சமயத்தில் நாலு வகுப்புகளை ஒரு பிராஜெக்டில் நடத்துவது அதிக கஷ்டம்.

4. ஒவ்வொரு பாடசாலையிலும் பிராஜெக்ட்டுப் பொருட்களை வைக்க அலமாரி செய்வது நலம். அதற்குச் சில தட்டுகளைச் செய்து பிள்ளைகள் செய்த விசேஷித்த பிராஜெக்ட்டுப் பொருள்களைச் சேகரித்து வைக்கலாம். இது பிள்ளைகளுக்கும் பாடசாலையைப் பார்க்க வரும் நண்பர்களுக்கும் அதிகப் பிரயோசனமும் மனோரம்யமுமாய் இருக்கும். இவ்வலமாரி செய்வது பிள்ளைகள் ஒரு பிராஜெக்ட்டாக எடுக்கலாம்.

5. பாடசாலையின் சுவர்களை அலங்கரித்து நல்ல படங்களைத் தொங்கவைப்பது பாடசாலையின் அழகுக்கும் உபயோகத்திற்கும் அதிக அனுகூலமாய் இருக்கிறது. இதையே ஒரு பிராஜெக்ட்டாக எடுப்பது நலம். கல்வி இலாகா டைரக்டர் அவர்கள் கோயம்பத்தூரில் செய்த பிரசங்கத்தில் இந்த ஆலோசனையை ஆசிரியர்களுக்குக் கொடுத்து இவ்வாறாகப் பாடசாலைப் பிள்ளைகளுடைய மனங்களுக்குச் சந்தோஷமுண்டாக்கத் தக்கதாக அலங்கரிக்கலாம் என்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

6. பிராஜெக்ட்டுமுறைப் பயிற்சிபெற்ற எல்லா ஆசிரியர்களும் மூன்று மாதத்தில் ஒரு முறை தங்கள் பிராஜெக்டடு அட்டவணைகளை டிப்டி இன்ஸ்பெக்டர் மூலமாய் L. M. கம்யூனிட்டிப் பாடசாலையின் தலைமை ஆசிரியரிடம் அனுப்பவேண்டும். இந்த அட்டவணையில் அவர்கள் செய்யும்படி எதிர்பார்த்த வேலைபல்ல, அவர்கள் உண்மையாகச் செய்த வேலையின் விபரத்தை எழுதித் தெரிவிக்க வேண்டும். இப்படியே தவறாமல் செய்வது அவசியம்.

7. போதனாமுறைவிஷயத்தில் ஆசிரியர்களிடம் கஷ்டங்களும் ஆசங்கைகளும் நேரிட்டால் அவைகளைப்பற்றி இப்பத்திராதிபருக்குக் கடிதம் எழுதியனுப்பினால் இப்பத்திரிகை மூலமாயாவது நேர் எழுத்தாயாவது பரிகாரமான வழிவகைகளைத் தெரிவிக்கக் கம்யூனிட்டிப் பாடசாலையின் ஆசிரியர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள் என்று யாவரும் அறிந்து கொள்ளவேண்டியது.

N 9 NK 28 · 1

# சந்தோஷம் நிறைந்த படிப்பு

## [இரு மாணுக்கர் சம்பாஷணை]

(சுந்தரம் ஹைஸ்கூல் மாணுக்கன். பாலு பிராஜெக்ட் பாடசாலை மாணவன். இருவரும் சாயங்காலம் புல்வெளி மைதானத்தில் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். அப்போது)

சுந்தரம்:— பாலு! ஏன்! எங்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கிறது தானே. பிராஜெக்ட் ஸ்கூல் என்று ஓடுகிறாயே.

பாலு:— சுந்தரம்! ஏன் பிராஜெக்ட் பாடசாலைக்கு ஓடுகிறேன் என்று கேட்கிறாயே? அது விவரம் தெரியுமா? எங்கள் இஷ்டம்போல எங்கள் பாடங்களை நாங்களே படித்துக் கொள்ளுகிறோம். எங்கள் உபாத்தியாயர் எங்களுக்குத் திண்டாட்டம் வரும்போது எங்களுக்கு எங்கள் சிக்கை அறுத்துவிடுகிறார். எங்கள் உற்சாகம், ஊக்கம், சந்தோஷம் சொல்ல முடியாது.

சுந்தரம். இதென்னடா! புதுமை. "தொட்டுக் காட்டாத வித்தை கட்டிப் போட்டாலும் வராது" என்றும் நம்நாட்டிலே சொல்லுகிறார்களே. அப்படியிருக்க, உபாத்தியாயர் சொல்லிக் கொடுக்காமல் பாடமெல்லாம் வருமா? என்ன?

பாலு. அட! பைத்தியமே கண்டதைக் கற்கப் பண்டிதன் ஆவான். என்று சொன்னதைக் கேட்கவில்லையா? கண்டதைக் கை செய்ய வேண்டும், செய்வதைப் பார்த்து படித்துக் கொள்ளவேண்டும். அது தான் உற்சாகத்தைத் தரும் படிப்பு. உபாத்தியாயர் சொல்லிக் கொடுக்க பொம்மைகளைப் போல கேட்டுக் கொண்டிருந்தால் சில வேளைகளில் வகுப்பில் தூங்கி விடுகிறோம். சில சமயங்களில் பாடம் நடக்கும் சமயத்திலேயே குழப்பு பண்ணி உதையும் வாங்குகிறோம். நாமே செய்து படிக்கும் போது கவனமெல்லாம் நாம் செய்யும் காரியத்திலேயே செல்லுகிறது. நாம் அதையே கற்றுக் கொள்ளுகிறோம்.

சுந்தரம். பாலு, என்ன பாடம் வேண்டுமானாலும் நாமே கற்றுக் கொள்ள முடியுமா? என்ன? நமக்கு அவ்வளவு படிப்பு இருக்கிறதா? அப்படிப் படித்துக் கொள்ளுகிறதாக இருந்தால் உபாத்தியாயர் என்னத்திற்கு? நீ பேசுவதெல்லாம் விந்தையாயிருக்கிறது.

பாலு. அடே நான் சொல்லுகிறேன் கேள். அன்றைக்கு எங்கள் உபாத்தியாயர் தோட்ட வேலைப் பிராஜெக்ட் எடுத்தார். முதல் முதல் நாங்கள் "சார்! 18மடையில் நல்ல மழை பெய்தது என்று சொன்னோம். அவர் எத்தனை அங்குல மழை பெய்தது என்று கேட்டார். நாங்கள் மழை அளவு கருவியில் 1·3 அங்குல மழை என்று கண்டு பிடித்துச் சொன்னோம்". இது மழைகாலமானதால் என்ன செய்யலாம் என்று கேட்டார். நாங்கள் பூந்தோட்டம் போடலாமென்று சொன்னோம். அப்படியானால் அதற்கு எப்படிப் பட்ட நிலம் வேண்டும் என்று கேட்டார். நாங்கள் அதிலிருந்து ஒவ்வொரு பயிருக்கும் வேண்டிய நிலத்தைப்பற்றிப் படித்தோம். பின்பு எங்கள் தோட்ட அளவு எடுத்துப் பார்த்தோம். அதிலிருந்து சதுரப்பரப்பு கோணங்கள் முதலியவைகள் படித்தோம். காய் கறி போடத் தீர்மானித்தோம். நல்ல காய் கறி விதைக்கு சேலம் பூச்செடி விதை வியாபாரிகளுக்குக் கடிதம் எழுதுவது எப்படி என்று கற்றுக் கொண்டோம். விதை வந்த பிறகு ஒவ்வொருவருக்கும் உபாத்தியாயர் விதை கொடுத்தார். நிலத்தைக் கொத்திப் பாத்திகட்டினோம். வியர்வை வர வேலைசெய்தோம். தேகாப்பியாசம் செய்வதைக் காட்டிலும் இந்த வேலையில் அதிக வியர்வை உண்டானது. பாத்திகளுக்குத் தண்ணீர் இறைத்துப் பாத்திகளில் ஊற்றி விதைகளைப் போட்டோம். ஒரு குறிப்பு நோட்டில் அதைக் குறித்துக் கொண்டு அது வளர வளர அதைக் கவனித்து, இயற்கைப் பாடம் படித்தோம். இதற்கிடையில் என்னென்ன காலத்தில் என்னென்ன விதைகளைப் போடுவது என்று காலங்களையும், பலத்தைத் தரும் காய்கறிகள் எவை என்று சுகாதார விஷயங்களையும் நாங்கள் போட்ட காய்கறிகள் பயிராகும் பற்றி தேசங்கள், சாப்பிடும் ஜனங்கள், முதலியவற்றினால் பூகோளப் பாடத்தையும் எல்லாம் நாங்களே சுயமாக உபாத்தியாயர் உதவியைக் கொண்டு கற்றோம். [illegible]லே படிப்பு [illegible].

சுந்தரம். இதென்னடா! குடியானவர்கள் வேலையைத்தானே செய்தீர்கள். என்ன அதிகம் படித்து விட்டீர்கள்?

பாலு. சுந்தரம்! குடியானவர்கள் வேலை தெரியாமல்தானே குடித்தனம் நாசமாய்ப் போச்சு. அது நன்றாய்த் தெரிந்திருந்தால் வேலையில்லாத் திண்டாட்டம் எதற்கு? ஒரு வேலைக்கு ஓராயிரம் பேர் ஏன் அப்ளிக்கேஷன் போடவேணும், நம் கையை நம்பி வாழுவது கடைத்தேறப் பண்ணும்.

பாலு. நீ சொல்லுவது தான் சரியாகத் தோன்றுகிறது. விளையாட்டுப் போல ஒரு கருமத்தின் மூலமாய்ப் படிக்கிறதுதான் எனக்கும் சரியாய்த் தோன்றுகிறது. நானும் உங்கள் பாடசாலைக்கே வருகிறேன்.

K. J. V.

## 5-வது சுய நோக்க முயற்சி வேனிற்கால பாடசாலையின் அறிக்கை.

லண்டன் மிஷன் கம்யூனிட்டி போதனாமுறைப் பாடசாலையின் 5-வது சுய நோக்க முயற்சி வேனிற்காலப் பாடசாலை ஏப்ரல் மீ 19ம் தேதி முதல் 30ம் தேதி முடிய நடைபெற்றது. கோயமுத்தூர் ஜில்லாக் கல்விச் சங்கத்தலைவர் மகா-ள-ள-ஸ்ரீ ராவ் சாஹிப் C.V. ராமச்சந்திரன் செட்டியார் B.A., B.L., அவர்கள் பாடசாலையைத் திறந்து வைத்தார். அத்திறப்பு விழாவில் ஈரோடு ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ A. துரைச்சாமி பிள்ளை அவர்கள் 'ஐம்புலப் பயிற்சி' என்ற பொருளின் பேரில் ஒரு சொற்பொழிவு ஆற்றினார்கள்.

சுய நோக்கமுயற்சி முறையானது இராஜதானியின் பல பாகங்களிலுமுள்ள எல்லா எலிமெண்டரி பாடசாலைகளிலும் துரிதமாய் இனிது பரவ வேண்டுமென்ற நோக்கத்தையுடைய பல கல்வி நிபுணர்களின் விருப்பத்திற்கிணங்க பிராஜெக்ட் கல்வியைப் பற்றி ஒன்றுமே அறியாத ஆசிரியர்களுக்கென்று இப்பாடசாலை நடத்தப்பட்டது. சென்னை கல்வி இலாகா டைரக்டர் அவர்கள் பாடசாலை பிரின்சிபால் அவர்களுக்கு எழுதின கடிதமொன்றில் இவ்வெண்ணத்தைப் புகழ்ந்தும் இவ்வண்ணம் பிரதி வருஷமும் நடைபெறுவது உசிதமென்றும் கூறியுமிருக்கிறார்கள். பாடசாலையின் சித்தியைக் குறித்து ஏற்பட்ட சிறிது சந்தேகம் சில நாட்களுக்குள் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கியது.



மிஷன் ஸ்தாபனங்கள் ஸ்தல ஸ்தாபனங்கள் பொது ஜன ஸ்தாபனங்கள் முதலியவைகளிலிருந்து விண்ணப்பங்கள் வந்துகொண்டேயிருந்தன.

இவ்வருஷம் இப் பாடசாலையில் பயிற்சிபெற்ற ஆசிரியர் இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் உட்பட 85பேர். பாடசாலைத் தலைமை ஆசிரியர் கனம் J.T. இராஜநாயகம் B.A.L.T., அவர்கள் பிராஜெக்ட் கல்வியின் தத்துவங்களைப்பற்றியும், ஆசிரியர் கனம் V. ஜான் அவர்கள் பிராஜெக்ட் கல்வி வகுப்பறையில் கையாளப்பட வேண்டிய முறையைப்பற்றியும், பாடசாலைப் பிரின்சிபால் கனம் H,A. பாப்லி B.A. அவர்கள் பிராஜெக்ட் கல்வி முறை அடங்கியுள்ள சில முக்கிய மனோதத்துவ சாஸ்திரக் குறிப்புகளையும் Mrs. சக்குனி மேனன் அவர்கள் (Inspectress of Schools) கிராம முன்னேற்றமும் சுயநோக்க முயற்சி முறையின் சிறப்பும் என்ற பொருளின் பேரிலும் உபந்நியாசங்கள் செய்தனர். கல்வித்துறையில் சுய நோக்க முயற்சி முறை செய்யக்கூடிய பணிகளை அதிக உற்சாகத்துடனும் தெளிவாகவும் எடுத்துக் காட்டிய Mrs. சக்குனி அம்மாள் அவர்களுக்கு பாட[illegible]னைவரும் ஆசிரியரும் மிக்க நன்றிகூற கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பிராஜெக்ட் சம்பந்தமான பல உபந்நியாசங்களின் மூலமாய் அநுபவ சாக்ஷிகள் கொடுத்த கனம் G. மாசில்லாமணியவர்கள் கனம் G. ரத்தினசாமியவர்கள் கனம் R. அருளானந்தம் அவர்கள் யாவருக்கும் எழுத வாசிக்கத் தெரியாத முதியோருக்கு சுலபமாயும் துரிதமாயும் எழுத வாசிக்கக் கற்றுக் கொடுக்க வேலூரில் அநுசரிக்கப்படும் 'லபக் முறையை' விளக்கிக்காட்டிய கனம் R. கிருஷ்டியன் அவர்களுக்கும், ஆசிரியர் கடமைகளைபற்றி விரிவாயெடுத்துச் சொன்ன ஈரோடு மஹாஜன ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் கனம் S. மீனாக்ஷிசுந்தரம் B.A., L.T., அவர்களுக்கும் பாடசாலை நன்றிபாராட்டுகிறது.

பாடசாலையின் முதல்வாரத்தில் காலைதோறும் பாடசாலை ஆசிரியர்களால் சுய நோக்க முயற்சி முறையை அநுசரித்து மாதிரி பாடங்கள் கொடுக்கப்பட்டன. மாணவர் யாவரும் பகுதி பகுதியாகச் சென்று வகுப்புகளைக் கவனித்து வந்தனர். இரண்டாவது வாரத்தில் மாணவரில் 28 பேர் வகுப்புகளுக்குத் தகுந்த சுய நோக்க முயற்சிகளைத் தெரிந்து கொண்டு வகுப்புகளின் பொறுப்பேற்று அதிக உற்சாகத்துடனும் சித்தியுடனும் நடத்தினார்கள். அவர்கள் தெரிந்து கொண்ட முடிவு விழாவிற்காக அறையை அலங்கரிதல், கிராமபடமாலை செய்தல, புகைவண்டி விளையாட்டு, மாணவர்க்கென்று தபால் பெட்டி வைத்து நடத்தல் பொரி மாலை செய்தல் என்ற பல சுயநோக்க முயற்சிகள் மெச்சத்

ச்சுவை யாயிருந்தன. சுயநோக்க முயற்சி முறையின் தத்துவங்களை அறிந்து கொண்டதுமல்லாமல் அம்முறையின்படி வகுப்புகளை நடத்தி அப்பியசித்தும் கற்றுக் கொண்டார்கள்.

பாடசாலை மாணவர் பாடசாலை நடந்த இரண்டுவாரங்களில் தாம் இப்புதிய முறையின் தத்துவங்களைத் தெரிந்து கொண்டதாகவும் இம்முறை எல்லா பாடசாலைகளும் அனுசரிக்கப்படக் கூடியது என்றும் உறுதி கூறியது யாவருக்கும் உற்சாகத்தைக் கூடியதாயிருக்கிறது.

எதிர்பாராத வண்ணமாக சூரியனும் பாடசாலையை ஆதரிப்பது போல தன் உஷ்ணத்தைக் குறைத்துக் கொண்டது. சில தினங்களில் மழையும் சொரிந்தது. கல்விக்குரிய வகுப்புகளோடு கூடிய சில சந்தோஷ சம்பவங்களையும் அனுபவித்தனர். ஒரு சனிக்கிழமை யன்று ஈரோடு பொதுஜன நந்தவனத்தில் ஒரு தேநீர்க் கச்சேரியும், பாடசாலையறையில் ஒரு சங்கீதக்கச்சேரியும் நடத்தப்பட்டன. தினமும் காலை தியான நேரங்களில் உதாரத்துவமாய் பிறர்க்கு நன்மை செய்யவேண்டுமென்ற ஆவியைப் பெற்றுக் கொள்ளத் தூண்டப்பட்டனர்.

பாடசாலையின் விருத்திக்கென்று உதவி செய்த யாவருக்கும் இவ்விடம் விஜயம் செய்து சொற்பொழிவாற்றிய பெரியாருக்கும், பெண்களுக்கென்றும் ஆண்களுக்கென்றும் நடத்தப்பட்ட விடுதிகளை சரிவரக் கவனித்து வந்த யாவருக்கும் பாடசாலையின் சித்திக்கென்று ஒத்துழைத்த காம்யூனிட்டி பாடசாலை ஆசிரியர்க்கும், எல்லாவற்றிற்கும் மேலாக பாடசாலை காலத்தில் பாடசாலை மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் தமது ஆசீர்வாதங்களைப் பொழிந்து தமது கிருபையை விளக்கச்செய்த பரம பிதாவுக்கும் நன்றி செலுத்துகிறோம்.

## ஒரே ஆசிரியர் பிராஜெக்ட் முறையின்படி நாலு வகுப்புகளை நடத்த வேண்டிய பாடசாலைகளில் அனுசரிக்கத் தக்கக் குறிப்புகள்.

1. ஒரு காலத்தில் இரண்டு வகுப்புகள் ஒரு பிராஜெக்ட் செய்து கற்றுக்கொள்ளவும், மற்ற இரண்டு வகுப்புகள் சாதாரண விஷயப் பாடங்களைக் கற்றுக்கொள்ளவும் நடத்தலாம்.

(a) தீர்மானித்தல், ஏற்பாடு யோசித்தல், செய்தல், நிதானித்தல் என்னும் நாலு படிகளை இரண்டு வகுப்புகளுக்கு ஏக சமயங்களில் நடத்தலாம்.



(b) பிராஜெக்ட்டை ஒட்டிய கணிதம் தமிழ்பாடங்கள் ஒவ்வொரு வகுப்புக்கேற்றபடி கொடுக்க வேண்டியது.

(c) பிராஜெக்ட்டை நிறைவேற்றும்போது மற்ற இரண்டு வகுப்புகளில் பாடங்களைக் கவனிக்கவேண்டியது.

(d) பொது அறிவு, பாடல்கள், கதைகள் எல்லா வகுப்புகளுக்கும் ஒரே சமயத்தில் கொடுக்கலாம்.

(e) இரண்டு வகுப்புகளுக்கும் பிராஜெக்ட் ஒரு வாரத்திற்கு நடத்தலாம். அல்லது பிள்ளைகளுக்கு உற்சாகம் குறைந்தால் மூன்று நான்கு நாட்களில் முடிக்கலாம். அதிக உற்சாகம் இருந்தாலோ இரண்டு மூன்று வாரங்களுக்கு நடத்தலாம்.

(f) பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை ஆசிரியர் திட்டவட்டமாக முன்னமே ஆயத்தம் பண்ணவேண்டும்.

(g) அடுத்த வாரம் மற்ற இரண்டு வகுப்புகளில் ஒரு பிராஜெக்ட் நடைபெறும்போது முன்னமே பிராஜெக்ட் செய்த வகுப்புகளில் அதற்கேற்ற பாடங்களை மறுபடியும் படிக்கலாம்.

(h) மூன்றும் நான்காம் வகுப்புகளில் ஒரு பிராஜெக்ட் நடைபெறும்போது அதற்கேற்ற வார்த்தைகளையும் கணக்குகளையும் அச்சமயத்தில் முதலிரண்டு வகுப்புகளில் நடத்தலாம்.

2. சில பிராஜெக்ட்டுகளை ஒரு சமயத்தில் நாலு வகுப்புகளுக்கும் நடத்தலாம். உதாரணமாக பூந்தோட்டப் பிராஜெக்ட் அல்லது பாடசாலைக் கட்டடம் அலங்கரிக்கும் பிராஜெக்ட்.

(a) தீர்மானித்தல் என்னும் முதற்படியின் விஷயத்தில் நாலு வகுப்புகளும் சேர்ந்து செய்யலாம். இதில் பாடம் அதிகமாய் வரவேண்டியதில்லை.

(b) ஏற்பாடு யோசித்தல் என்னும் இரண்டாம்படியின் விஷயத்தில் வெவ்வேறு பாடங்களை வகுப்புகளுக்குக் கொடுக்கலாம்.

(c) முதல் வகுப்பு—அதற்கேற்ற வார்த்தைகளை எழுதல்.
இரண்டாம வகுப்பு— சிறு வாக்கியங்களை எழுதல்.
மூன்றும் நான்காம் வகுப்புகள்— அதற்கேற்ற கணக்குகளைச் செய்யலாம்.

நான்கு வகுப்புகளும் சேர்ந்து பின் வரும் விஷயங்களைச் செய்யலாம்.

(1) என்னென்ன பூக்களையும் செடிகளையும் தானியங்களையும் வைக்கவேண்டும் என்பது.

(2) தோட்டத்தின் ஒழுங்கு எவ்வாறிருக்கவேண்டும்.

(3) ஒவ்வொரு வகுப்பிற்கும் எந்தெந்தப் பாகங்களைக் கொடுக்கவேண்டும் என்பது.

(d) செய்தல் என்னும் மூன்றாம்படியின் விஷயத்தில் ஒவ்வொரு வகுப்பும் தன்தன் வேலையைச் செய்யலாம். ஆசிரியர் எல்லா வகுப்புகளையும் மேற்பார்க்கவேண்டும். சிறு பையன்களுக்குப் பெரிய பையன்கள் உதவி செய்யும்படி ஏற்படுத்தலாம். மூன்றாம் நான்காம் வகுப்புப் பையன்கள் முதலாம் இரண்டாம் வகுப்புகளுக்கு உதவி செய்வது நல்லது.

(e) நிதானித்தல் என்னும் நான்காம் படியின் விஷயத்தில் முதலாவது நாலு வகுப்புகள் சேர்ந்து செய்த வேலையை நிதானிக்கலாம். பின்பு வெவ்வேறான பாடங்களை ஒவ்வொரு வகுப்புக்கும் கொடுக்கலாம்.

(f) பெரிய பிராஜெக்டிற்குச் சார்பாக ஒவ்வொரு வகுப்பும் வெவ்வேறு கிளைப் பிராஜெக்டுகளை எடுக்கலாம். இந்தக் கிளைப் பிராஜெக்டுகள் அந்தந்த வகுப்பின் திறமைக்குத் தக்கபடியே இருக்க வேண்டும்.

## தோட்டப் பிராஜெக்டுக்குரிய கிளைப் பிராஜெக்டுகள்.

| | | |
|---|---|---|
| 1. | பூமாலைப் பிராஜெக்ட் | I, II வகுப்புகள். |
| 2. | காய் வகைகளை விற்கும் பிராஜெக்ட் | III, IV ,, |
| 3. | வெவ்வேறு இலைகளைச் சேகரித்தல் | III, IV ,, |
| 4. | மாதிரி தொடர் மலைப்பிரதேசப் பிராஜெக்ட் | III, IV |
| 5. | பல புஷ்பங்களை வரைந்தெழுதல் | iii IV ,, |
| 6. | பல வகை விதைகளைச் சேகரித்தல் | I ii ,, |

## செய்யக்கூடிய பிராஜெக்டுகளின் ஜாபிதா.

### முதல் வகுப்பு

1. பல சுகாதாரப் பிராஜெக்டுகள்—உடல், உடை, சுற்றுப்புறத் சுத்தம் காத்தல்.
2. தீப்பெட்டிகளின் மேலுள்ள படங்களைச் சேகரித்தல்.
3. கூரி செய்தாடல்.


Tr 3rr2116, N23 N°33.

4. ஓலை, களிமண், தக்கை, அட்டை முதலிய வஸ்துக்களால் பொருட்களைச் செய்தல்.
5. சிறுவர்களுக் கேற்றவாறாகப் பலவித விளையாட்டுகளைச் செய்தல்.
6. தென்னோலைக் கிளி செய்தல்.
7. பல விளையாட்டுப் பிராஜெக்டுகள்.

### இரண்டாவது வகுப்பு

1. பல சுகாதாரப் பிராஜெக்டுகள்.
2. கோலாட்டம் முதலிய தேகாப்பியாச செய்கைகள்.
3. பலவித காகிதவேலைகளைச் செய்தல்.
4. பல வகையான படங்களைச் சேகரித்துப் புஸ்தகத்தில் வைத்தல்.
5. இலை தைத்தல்.
6. தலைப்பாய் செய்தல்.
7. அட்டைத் தராசு செய்தல்.

### மூன்றாம் வகுப்பு

1. சுகாதாரப் பிராஜெக்டுகள்—சிறு மருந்துப் பெட்டி.
2. திருவிழாக்களுக்கடுத்த பிராஜெக்டுகள்.
3. பூந்தோட்டம் அல்லது காய்வகைத் தோட்டம் போடல்.
4. பல விதப் பூச்சிகளைச் சேகரித்தல்.
5. பல விதமான மாலைகள்—முத்து, சிரம்பு, மெழுகு, பொரி முதலியவை.

### நான்காம் வகுப்பு

1. பூந்தோட்டம் அல்லது காய்வகை தோட்டம் போடல்.
2. தரை, ஆறு, நீர்வீழ்ச்சி, மலை முதலியவைகளைக் காட்டும் உருவங்களைத் தோட்டத்தில் செய்தல்.
3. கதர் குல்லாய்ச் செய்தல்
4. வகுப்புப் பஞ்சாயத்துத் தெரிந்தெடுத்தல்
5. முதலுதவி செய்தல்
6. வர்ணக் காகித அங்கவஸ்திரம் செய்தல்

### ஐந்தாம் வகுப்பு

1. தக்கையினால் நூல் நூற்றல்
2. ராட்டை வாங்கி நூல் நூற்றல்
3. தேசியக் கொடி செய்து பறக்கப் பண்ணல்
4. தங்கள் கிராமத்தில் கள் சாராயக் கடைகளின் கேடுபாடுகளும் அதை ஒழிக்கும் வழிகளும் என்னவை என்னும் ப்ரஸ்னைப் பிராஜெக்ட்
5. கிராமத்தின் விளைபொருள்களும் அவை போகுமிடங்களும் வாங்கும் பொருள்களும் அவைகளை வாங்குமிடங்களும் என்னென்னவைகள் என்ற ப்ரஸ்னைப் ப்ராஜெக்ட்.
உயர்வு தாழ்வுகள் காணப்படும் ஜில்லாப் பூகோளப் படம் செய்தல்.

# 3ம், 4ம், வகுப்புகளுக்கு.

**PROJECT:-** மலை, நதி இவைகளின் பிரிவுகளையும், இதன் மூலமாய் ஏற்படும் பிரிவுகளையும் பிள்ளைகள் செய்தல்.

## Stage in the Project:—Purposing.

பாடசாலை ஆரம்ப வாரம்.

### 1 சுயநோக்க முயற்சி வளர்ச்சி:—

பிள்ளைகளுடன் உபாத்தியாயர் சம்பாஷணை செய்து, நமது கிராமத்தின் பக்கத்திலுள்ள குன்று, நதி, அல்லது வாய்க்கால், ஏரி, குளம், முதலிய ஏதாவது ஒன்றைப் பற்றி சம்பாஷணை செய்தல். சம்பாஷணை செய்யும் பொழுதே உபாத்தியாயர் பிள்ளைகள் மனதைக் கவர்ந்து, போய்ப் பார்த்து வர ஆவலை உண்டாக்குதல். இதன் மூலமாய்ப், பார்த்து வரவேண்டும் என்று தீர்மானம் செய்து கொள்ளல். பார்த்துவந்தபின் அம்மாதிரி செய்ய தீர்மானித்தல்.

மேற்கண்ட சுய நோக்க முயற்சி மூலமாய் உதித்து வரும் பாடங்கள்.

சம்பாஷணையில் ஒருவருக்கொருவர் தர்க்கித்தல், பல விஷயங்களை யோசித்துத் தர்க்கம் செய்தல், இதனால் பேச்சு வன்மை திருத்தமாகப் பேசும் பழக்கம் ஏற்படுகிறதுடன் கூச்சமின்றி பேசும் வன்மை ஏற்படுகிறது.

*தமிழ்:—* நதி, குன்று, மலை என்றால் என்ன என்று சுய நோக்க முயற்சி நோட்டுப் புத்தகத்தில் எழுதி வாசித்தல்.

*கணிதம்:—* மலை, அல்லது, குன்று, அல்லது நதி, நமது பாடசாலையிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று கணக்கிடுதல். மை. பர். கெ. அ. அங். அதோடு எத்தனை பர்லாங் என்று கணக்கிடுவதின் மூலமாய் எண் மானம் எண் குறிப்பு.

மலை, நதி, இவற்றின் மூலமாய்ப் பூகோளப் பாடமும், பொது அறிவும் மலையின் மேல் கட்டப் பட்டிருக்கும் கோவில்களின் மூலமாய்ச் சரித்திரப் பாடமும் இயற்கைப் பாடமும் வரலாம்.

### 2 சுய நோக்க முயற்சி வளர்ச்சி

இவர்கள் போய்ப் பார்த்து வந்தபின் பார்த்த விஷயங்களை ஞாபகப் படுத்தி வகுப்பில் எழுதுதல். பார்க்குங் குறிப்புகள்.



பாடம்.

| | | |
|---|---|---|
| 1 குன்று | 10 தீவு | இம்மாதிரி பார்த்ததின் மூலமாய் ஏற்படும் குறிப்புகளை எழுதி பதிவு செய்து கொள்ளுதல். |
| 2 மலை | 11 தீபகற்பம் | |
| 3 மலை உச்சி | 12 வளைகுடா | |
| 4 மலைச்சரிவு | 13 கறை | |
| 5 அடிவாரம் | 14 ஏரி | |
| 6 கணவாய் | 15 மதகு | |
| 7 காடுகள் | 16 கால்வாய் | |
| 8 நதி | 17 நீர்ப் பாசனம் | |
| 9 உபநதி. | | |

### 3 சுய நோக்க முயற்சி வளர்ச்சி :—

மேற் கூறியவைகளைப் பார்த்து வந்தபின் வகுப்பில் இதில் சிலவற்றைக் களிமண்ணிலோ, அல்லது காகிதம் வெந்தயம் கலந்து இதன் மூலமாகவோ செய்ய ஆத்திரத்தை உண்டாக்குதல்.

**பாடங்கள்:—**

நேரில் பார்த்து வந்த விஷயங்களை எழுதுவதின் மூலமாய்த் தமிழ்க் கையெழுத்தும் வாசிப்பும், இயற்கையின் தோற்றங்களையும் அதன் பிரயோசனத்தையும், நதி, குன்று, குளம் ஆறு, கால்வாய் மூலமாய்ப் பூகோளம் முதலிய பாடங்களைச் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு அமைத்து அப்பியசித்தல்.

## Planning Stage:—

### சுய நோக்க முயற்சி வளர்ச்சி.

வகுப்பில் செய்ய வேண்டியது எவை என்று தீர்மானித்துக் கொண்டு வேண்டிய சாமான்களைத் தயார் செய்தல்.

செய்ய வேண்டியது.:—மலை, நதி, உபநதி, கிளைநதி, தீவு, தீபகற்பம், ஏரி, குளம், இவைகளில், இடத்திற்குத் தகுந்தாற் போல் தெரிந்து கொண்டு செய்ய எத்தனித்தல். இதற்கு வேண்டிய சாமான்கள் 5அடி நீளம் 4அடி அகலமான பலகையிலோ, அல்லது பாடசாலைத் தோட்டத்திலோ, செய்யலாம். களிமண், அல்லது காகிதம், வெந்தயம், இவைகளைக் கொண்டாவது வசதியைப் போல் செய்ய ஒழுங்கு செய்தல்.

**பாடம்**

- செய்யப் போகும் தொழிலின் மூலமாய் நமது கிராமக் கைத்தொழில்கள், ரிலீப்மேப் செய்யும் தொழில், இவைகளைச் சம்பாஷித்து இதன் மூலமாய் கைத் தொழில் பாடங்கள் பூகோள சம்பந்தமாயும் தொழிலுக்குத் தகுந்த கூலியைக் கணக்கிட்டு ரூ. அ. பை. கணக்குகளும் தொழிலின் மூலமாய்ப் போக்குவரவு சாதனங்களும், பொது அறிவு முதலிய பாடங்களும அப்பியசித்துக் கற்றுக் கொள்ள வசதி கொடுத்தல் வேண்டும். இம்மாதிரி சந்தர்ப்பம் கொடுப்பதால் கூட்டுறவு, சமுதாய வாழ்க்கை முதலிய நற்குணங்கள் குழந்தைகளுக்கு ஏற்படுகிறது.

## Executing Stage:—

பலகை, களிமண், அல்லது காகிதம், வெள்ளையம் கலந்து, ஏதாவது வைத்துக் கொண்டு, இவைகளை எவ்விதம் தயார் செய்யப்பட்டது, எந்த விதமான பக்குவத்தோடு செய்யப்பட்டிருக்கிறதென்று திட்டவட்டமாய் எழுதிப் பதிவுசெய்தல். வேலை செய்யும் நேரம், இதன் விஷயங்களை ஆராயும் நேரம் என்று இரு பிரிவாகப் பிரித்துக் கொண்டு அதாவது 8மணி முதல் 9மணி வரை சுயநோக்க முயற்சி வேலையும், 9–10½வரை சுயநோக்க முயற்சி பாடங்களையும் ஆராய்ந்து கற்றுக் கொள்ளுதல் எனத் தீர்மானித்து சாமான்களையும் வகுப்பிலுள்ள பிள்ளைகளையும் பல பிரிவாகப் பிரித்து அதாவது களிமண் தயார் செய்பவர்கள், பலகையைத் தயார்செய்பவர்கள், பிளான் தயார் செய்பவர்கள், செய்யப் போகும் குறிப்புகளின் படம் தயார் செய்பவர்கள், மலையின் உயரம், அகலம், இக்குறிப்புகள் கணிப்பவர்கள் என பலபிரிவாகப் பிரித்து உற்சாகப்படுத்தி விடுதல். இம்மாதிரி பல பிரிவாகப் பிரித்து உபாத்தியாயர் ஒவ்வொரு பிரிவாருக்கும் லக்ஷ்யம், சுயமுயற்சி, நல் ஆராய்ச்சி ஏற்படும் வண்ணம் உற்சாகப்படுத்தி அவ்வப்போது சொல்லி அப்பியாசப் படுத்தவேண்டும்.

### பாடம்.

குறிப்பிட்ட நேரத்தில் அந்தந்தப் பிரிவார் அவரவர்களின் வேலையைச் செய்தபின் பாட ஆராய்ச்சி நேரத்தில் ஒவ்வொரு பிரிவாரும் அவரவர்களின் அறிக்கை கொடுக்க வேண்டும். அதை எல்லா மாணவர்களும் எழுதிக் கொள்ள வேண்டும். களிமண், அல்லது வெள்ளையம், காகிதம், தயார் செய்யும் கமிட்டி அறிக்கையின் மூலமாய், இயற்கைப் பாடமும், கைத்தொழில் விஷயங்களும், மண் மூலமாய், பயிர்த்தொழில் பாடமும். பலகை தயாரிப்பவர்களின் மூலமாய், தச்சு வேலை, இயற்கைப் பாடம். பூகோளப் பாடம், அதாவது பலகை கிடைக்குமிடம், மரம், தோப்பு, மலைகள், மழை முதலியன அப்பியசித்தல்.

பலகையின் கிரயம், அல்லது காகிதம் வெள்ளையம் இவைகளின் மூலமாய் ரூ-அ-பை கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் கணக்குகளும், குழி, சீம் கணக்குகளும், படி, ஆழாக்கு வெள்ளையம் அளப்பதின் மூலமாய்ப் பல கணக்குகள் கற்றுக் கொடுத்தல்.

### சுய நோக்க முயற்சி வளர்ச்சி

செய்த வேலையைச் சரி பார்த்து வர்ணம் கொடுத்தல்.

### பாடம்

பச்சை, ஊதா, நீலம், மரக்கலர், முதலியவர்ணங்களை, மலை, நதி காடு, புல்வெளி இவைகளுக்கு வர்ணம் பூசும்போது சைன்ஸ்பாடம் கற்பிக்கலாம். இதர புஸ்தகங்களை வாசித்தல், படங்களை படித்து வர்ணம் பூசுவதின் மூலமாய் பூகோளப்பாடம் கற்பிக்கலாம்.



148784

## Judging Stage.

1 செய்து முடித்த வேலையை ஒவ்வொன்றாய்ப் பார்த்து, ஆராய்தல்.

2 ஒவ்வொன்றிற்கும் தனித் தனிக் குறிப்பு எழுதி வைத்தல்.

3 செய்த வேலையை ஆரம்பித்த நாள்முதல் முடித்த நாள் வரை குறிப்பு தயார் செய்தல்.

4 படம் திறப்பு விழாக் கொண்டாட்டம் ஒன்று நடக்க ஏற்பாடு செய்தல்.

5 அதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்தல்.

### பாடம்

சுயநோக்க முயற்சி வேலைப் பாடுகளைப்பற்றி எழுதி வாசித்தல். இதன் மூலமாய்த் தமிழ்ப் பாடம்.
செலவு கணக்கு தயார் செய்தல் கணக்குப் பாடம்.
இவைகளைத் தயார்—செய்து படம் திறப்புவிழாக் கொண்டாட்டத்தில் வாசித்தல்.

**N.B.** இம்மாதிரி இடம்பொருள் ஏவல்களை முன்னிட்டு வகுப்பிற்குத் தக்கவாறு பாடங்களை அமைத்து சுயநோக்க முயற்சி வேலையின் மூலமாய்ப் பாடங்களைக் குழந்தைகளுக்கு இலகுவாய்க் கற்பிக்கலாம். இங்கு காட்டப்பட்ட பாடக்குறிப்பு மூன்றும் நான்காம் வகுப்புகளுக்குப் பொதுவாக எழுதப்பட்டிருக்கிறது. உபாத்தியாயர் அந்தந்த வகுப்புகளுக்குத் தக்கவாறு பாடம் இதன் உதவியைக் கொண்டு தயார் செய்து கொள்ள வேண்டியது.

---

# 1, 2ம் வகுப்புகளுக்கு.

## Project. தென்னோலையினால் ஊதி செய்து ஊதி விளையாடல்.

---

### சுயநோக்க முயற்சி வளர்ச்சி

### Purposing Stage.

பட்டணம் சென்றிருந்த கருணாகரன் என்ற பையன் ஒரு நாதன ஊதியோடு பள்ளிக்கூடத்திற்கு வருதல். அந்த ஊதியை பற்றி பிள்ளைகள் கேட்டு ஆனந்தமும் ஆச்சரியமும் அடைந்து வகுப்புக்கு வந்ததும் உபாத்தியாயரிடம் அதைப்பற்றிச் சொல்லுதல்.

பிள்ளைகளும் உபாத்தியாயரும் ஊதியைப்பற்றிக் கலந்து பேசுகையில் பிள்ளைகளெல்லோரும் தங்களுக்கும் ஆளுக்கோர் ஊதி வேண்டுமென்பதாகச் சொல்லுதல்.

பள்ளிக்கு வருகிற பிள்ளைகளில் அநேகர் ஏழைகளாக இருக்கிற படியினால் அவர்களால் கடையில் விலை கொடுத்து ஊதி வாங்க முடியாதாகையால் பணமின்றி அவரவர்களே ஆளுக்கோர் ஊதி செய்து கொள்ளலாமென்று விருப்பங் கொள்ளுதல்.

நூதன ஊதியின் கிரயத்தைப் பற்றிப் படித்தல்.

### Tamil Oral Conversation I & II

பட்டணத்திலிருந்து கொண்டு வரப்பட்ட நூதன ஊதியைப்பற்றி பிள்ளைகளும் உபாத்தியாயருமாகச் சம்பாஷித்தல். விசேஷமாகக் கருணாகரன் ஊதி விஷயமாகத் தன் சொந்த அநுபவத்தைச் சொல்லுதல்.

### General Knowledge I or II.

பலவிதப் பொருட்களினால் ஊதிகள் செய்யப்படுகின்றன. சில மரத்தினாலும், பல வெள்ளி, பொன், தகரம். நிக்கல் முதலிய உலோகங்களினாலும், வேறு சில பலவிதமான இலைகளினாலும், மற்றுஞ்சில நாணல் தண்டுகளினாலும் செய்யப்படுகின்றன.

### Tamil Reading & Writing. I

ஊதி } இவ்விரு வார்த்தைகளையும் பிள்ளைகள் சரியாகச்
குழல் } சொல்லிப் பழகுதல். எழுதிப்பழகுதல்.

### Tamil Writing&Reading. II

உனக்குத் தெரிந்த பலவிதமான ஊதிகளின் பெயரை எழுதிக் காட்டு.

### Dictation. II

இது கருணாகரன் ஊதி.
இது ஒரு நூதன ஊதி.
ஊதியை ஊது.
அதிலிருந்து வருவது என்ன?
அதுதான் சத்தம் அல்லது சப்தம்.

### Arithmetic. I

(1) ஒரு ஊதி 2 அணா அப்படியானால் 2 ஊதிகளின் விலை என்ன?

(2)ஒன்று 1 அணா வீதம் 12 ஊதிகளின் விலை என்ன?

(3)பிள்ளைகள் 2, 2 ஆகக்கூட்டி 10வரையில் படித்தல், எழுதல். பாராமல் ஒப்பித்தல.

### Arithmetic. II

1 ஒரு ஊதி 2 அணா வீதம் 16 ஊதிகளின் விலை என்ன?

2 ஊதி 2 அணா வீதம் 2 ரூ 8 அணாவுக்கு எவ்வளவு ஊதி கிடைக்குமென்று பார்த்தல்.

3 இந்திய நாணயத்தைப் பற்றிப் படித்தல்.



கருணாகரன் தனது ஊதியை மற்றவர்களுக்குக் கொடுத்து ஊதும்படி செய்து அதன் மூலமாக பிள்ளைகள் ஆசையை ஒருவாறு நிவிர்த்தி செய்தல்.

### Planning Stage.

காசில்லாமல் எவ்விதப் பொருட்களில் ஊதி செய்யலாமென்று பார்த்து ஊதி செய்வதற்கு தென்னோலை வேண்டுமென்று அறிதல்.

தென்னோலைக்கு என்ன செய்கிறதென்று பார்த்த போது முதலாம் வகுப்பிலுள்ள பத்மா என்ற பிள்ளை தன்னுடைய வீட்டில் மூன்று தென்னை மரங்களிருக்கின்றன வென்றும், முந்திய தினம் அடித்த பலத்த காற்றுக்கு அத்தென்னை மரங்களிலிருந்து மட்டைகள் கீழே விழுந்து கிடக்கின்றன வென்றும், என் பெற்றோரிடம் கேட்டு அவைகளில் நமக்குத் தேவையான தென்னோலைகளைப் பெற்றுக் கொள்ளலாமென்றுஞ் சொல்லுதல்.

பத்மாவின் வார்த்தையைக் கேட்ட பிள்ளைகள் தாங்களெல்லோருமே அவள் வீட்டை அடைந்து அவளுடைய பெற்றோரிடம் தங்களுக்குத் தேவையான ஓலையைக் கேட்டு வருவது உசிதம் என்று சொல்லி அன்னவள் வீட்டை அடைதலும், ஓலை பெறுதலும், பள்ளிக்குத் திரும்பி வருதலும்.

சரி இப்பொழுது ஓலை இருக்கிறது இனி என்ன செய்ய வேண்டுமென்று பார்க்கையில் அவ்வோலையைக் கிழிக்க கத்தி வேண்டுமென்றும், ஊதி செய்யும் பொழுது ஓலையைச் சுற்றி வரும் சமயம் அதன் கடைசியை ஒரு முள்ளினால் குத்த முள் வேண்டுமென்று அறிதல், கொண்டு வருதல்.

### Tamil Oral Conversation. I & II

ஊதி செய்வதற்கு என்னென்ன சாமான்கள் தேவை என்பதைப் பற்றிச் சம்பாஷித்தல்.

### Tamil Reading & Writing I.

ஓலை

### Tamil Dictation II.

ஊதி செய்ய ஓலை வேண்டும்.
ஓலை வெட்டக் கத்தி வேண்டும்.
ஓலை தைக்க முள் வேண்டும்.

### EXCURSION I&II

தலைமை ஆசிரியரிடம் உத்தரவு பெற்று முதலாம் இரண்டாம் வகுப்பு மாணவர்கள் பத்மாவின் வீட்டை அடைதல். பத்மாவின் தந்தையின் உத்தரவு பெற்று ஓலை பெற்றுத் திரும்பி வருதல்.

## General Knowledge I & II

இது ஒரு தென்னை மரம். இதற்கு வாதுகள் கிடையாது. இது உயரமாக வளர்ந்திருக்கிறது. இது சல்லி வேரை உடையது. இதற்குத் தண்ணீர் இன்றியமையாதது.

## Arithmetic I

1 காற்றில் விழுந்த மட்டைகள் எவ்வளவென்று எண்ணுதல்.

2 பத்மாவிடம் 2 ஓலைகளும் சுந்தரியிடம் 3 ஓலைகளுமிருந்தால், இரண்டு பேரிடமுள்ள ஓலைகள் எவ்வளவு?

## Arithmetic II

1 ஒரு மட்டையிலுள்ள ஓலைகளை எண்ணுதல்.

2 நான்கு மட்டைகளின் முறையே 47, 48, 56, 72 ஓலைகளிருந்தால், மொத்த ஓலைகள் எவ்வளவு?

## General Knowledge I & II

முற்களில் பலவிதமுண்டு. கள்ளிமுள், வேலமுள், கிளவன்முள் இலந்தை முள், காந்தி முள் முதலியன.

## Drawing I & II

| | |
|---|---|
| சத்தியின் உருவம் வரைதல் | |
| உன்னத சிந்தனை. | பெரியோருடைய அனுமதி |
| நுட்பமாய் விஷயங்களைக் கிரகித்தல். | பெறுதல். |
| | ஓலை |
| கணித்தல். | |
| ஆராய்தல். | முள் |
| வரைதல். | கத்தி |

## Executing Stage:—

பிள்ளைகள் தாங்கள் ஏற்கனவே சேகரித்த பொருட்களைக் கொண்டு ஊதி செய்தல்.

ஓலையிலுள்ள ஈர்க்கை வேறு படுத்தல். சுமார் அரை அடி நீளமுள்ள ஓலைத்துண்டை எடுத்து அதை இரண்டாக மடித்தல். அவ்விதம் மடிக்கப்பட்ட ஓலையின் மீது நீளமான ஓலையைக் கொண்டு முதலில் சிறிதாகவும், பிறகு வரவரப் பெரிதாகவும் வரும்படி சுற்றிக் கொண்டு வருதல்.

அவ்விதம் அந்த ஓலை முடிகிற பாகத்தில் ஓர் முள்ளைக் கொண்டு குத்தி இணைத்தல். பிறகு முன்னே மடக்கினதைக் கத்தியால் அறுத்துவிடுதல்.

பிள்ளைகள் ஊதி எல்லாம் செய்த பிறகு வகுப்பில் கிடக்கக் கூடிய ஈர்க்கு ஓலை முதலியவைகளைப் பெருக்கி அப்புறமாக்குதல்

## Judging Stage:—

இப்பொழுது பிள்ளைகள் தங்களுடைய ஊதியை வாயில் வைத்து ஊதுதல். அவ்விதம் ஊதுகையில் அதிலிருந்து தொனிக்கும் சத்தத்தைக் கேட்டு ஆனந்தித்தல்.

இப்பொழுது எவரெவருடைய ஊதி சரியாகச் சப்திக்கவில்லையோ அதை மறுமுறை செய்கையில் சரியானபடி தொனிக்கும்படி நிர்ணயித்தல். அவ்விதமே சமயா சமயங்களில் ஊதி செய்து பழகுதல்.

## General Rural about the Project in the Executing Stage I&II

ஊதி செய்வதற்கு முன்னாலே ஓலையை எடுத்து அதனடிப் பாகத்திலுள்ள காம்பை அப்புறப்படுத்த வேண்டும். பிறகு, ஓலை மத்தியில் கிழிக்கு விடாதபடி ஈர்க்கையை கிழித்தெடுக்க வேண்டும். பிறகு சீட்டி or சீக்கி ஒரு துண்டு ஓலையினால் செய்து அதன் மீது நீண்டதோர் ஓலையை வரவரப் பெரிதாக வரும்படி சுற்றிக் கொண்டு வரவேண்டும். அவ்விதம் சுற்றிவரும் ஓலை முடியும் பொழுது ஒரு முள்ளைக்கொண்டு குத்தி அவ்வோலையை ஒன்றோடொன்று இணைக்க வேண்டும்.

## Hand Work I & II

கத்தியைக் கொண்டு காம்பை வெட்டுதல். ஓலையிலிருந்து ஈர்க்கை வேறாகக் கிழித்து எடுக்தல். மடித்தல், சுற்றுதல், முள்ளைக் குத்துதல், அறுத்தல், முதலியன.

## Hygiene I & II

பிள்ளைகள் எல்லோரும் ஊதி செய்த பிறகு வகுப்பில் கிடக்கும் தூசிகளைப் பெருக்கி அப்புறப் படுத்துதல். வகுப்பறையை சுத்தம் செய்தல்.

## Tamil Oral Conversation I & II

பிள்ளைகள் தாங்கள் சுயமாய்ச் செய்த ஊதியை எவ்வளவும் உபயோககரமென்று சம்பாஷித்தல்.

## Tamil Reading & Writing

ஊதி

ஊதுதல்

148784



N33-11
T:3 m2116, N281

### Tamil Reading & Writing II

இது சீதாவின் ஊதி.
சுந்தரன் மிகவும் நன்றாக ஊதுகிறான்.
வசந்தாவின் ஊதி சப்திக்கவில்லை.

### Arithmetic I

1 10 பேரில் 7 பேருக்கு ஊதியிருந்தால் இன்னும் எத்தனை பேருக்கு ஊதி வேண்டும்.

2 7 ஊதியில் 4 ஊதி ஊதவில்லை. ஊதி மீதி எவ்வளவு?

### Arithmetic II

1 வாத்தியக் கருவி ஒன்று 5 ரூபாய். அப்படியானால் 16 வாத்தியக் கருவிகள் என்ன விலை?

2 ஒரு வாத்தியம் 7 ரூபாய் அப்படியானால் 16 வாத்தியத்தின் விலை என்ன?

**N.B.** இம்மாதிரி இடம் பொருள் ஏவல்களை முன்னிட்டு வகுப்பிற்குத் தக்கவாறு பாடங்களை அமைத்து சுயநோக்க முயற்சி வேலையின் மூலமாய்ப் பாடங்களைக் குழந்தைகளுக்கு இலகுவாய்க் கற்பிக்கலாம். இங்கு காட்டப்பட்ட பாடக்குறிப்பு முதலாம் இரண்டாம் வகுப்புகளுக்குப் பொதுவாக எழுதப்பட்டிருக்கிறது உபாத்தியாயர் அந்தந்த வகுப்புகளுக்குத் தக்கவாறு. பாடம் இதன் உதவியைக் கொண்டு தயார் செய்து கொள்ள வேண்டியது.

முற்றிற்று.

## அறிவிப்பு.

---

ஈரோடு லண்டன் மிஷன் கம்யூனிட்டி* போதனாமுறைப் பாடசாலை பழைய மாணவர்களுக்கு சங்கக் காரியதரிசி அறிவிப்பு:—

இவ் வருஷ சங்க சந்தாவை தாங்கள் டிசம்பர் மாதத்திற்குள்ளாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள். அடுத்த நவீனக் கல்வி பத்திரிகையில் சந்தா செலுத்தப் பட்டவர்களின் ஜாபிதா பிரசுரிக்கப்படும்.

1 வருஷ சந்தாத் தொகை அணா நான்குதான். இப்பத்திரிகையைப் பெறுக் கொண்டால் பத்திரிகையின் சந்தா உள்பட அணா ஆறாகும்.

இப்படிக்கு
உங்களின் நண்பன்
**R.** வேதமுத்து.

---

லண்டன் மிஷன் பிஸ்கிங்டன் பிரஸ், ஈரோடு.

# நவீனக் கல்வி

| | |
|---|---|
| பத்திராதிபர்கள் | ரெவ். H. A. பாப்லி. |
| | ஸ்ரீமான். J. T. ராஜநாயகம் அவர்கள். |

வருஷம் மும்முறை பிரசரிக்கப்படும்.

வருஷ சந்தா 6 அணா

## பழைய மாணவர் சங்கம்

| | |
|---|---|
| தலைவர் | ரெவ். H. A. பாப்லி B. A. |
| உப தலைவர் | ஸ்ரீமான் J. T. ராஜநாயகம் B. A. L. T. |
| பொக்கிஷதாரர் | ஸ்ரீமான் E. S. ஆறுமுகம் அவர்கள். |
| காரியதரிசி | ஸ்ரீமான் R. வேதமுத்து அவர்கள். |

வருஷ சந்தா 4 அணா

பழைய மாணவர் சங்கத்தின் அங்கத்தினர்க்கு சங்கத்தின் சந்தாவும், பத்திரிகையின் சந்தாவும் சேர்ந்து 10 அணாவாகும்.

உடனே செலுத்திச் சேரவேண்டும்.

மானிடர் கற்கும் வகை—பரொ. கில்பாட்ரிக்... ரூ 0-8-0
சுய நோக்க முயற்சி முறையை இந்திய ஆரம்பக் கல்வியில் கையாடும் விதம். J. T. ராஜரத்னம். ... ... 2-4-0
பிள்ளைத் தன்மை ஆராய்ச்சி. G. E. சாண்டர்ஸ். 0-8-0

# ஆரம்பப் பாடசாலை விளையாட்டுகள்.

85 படங்கள் கொண்டது
அநேக பாட்டுகள் அடங்கியது
பலவித விளையாட்டுகள் கொண்டது
ஈரோடு E. S. ஆறுமுகம் அவர்களால்
இயற்றப்பட்டது.

எல்லா எலிமெண்டரி பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அவசியமான நூல் இதுவே.

Foreword by Dr. G. F. Andrews, B A, L. T., (Madras)
M .A., Ph. D., (Columbia)
Senior Physical Director, Madras.

விலை 0--12—0

கிடைக்குமிடம்:—
E. S. ஆறுமுகர்,
உடற் பயிற்சி ஆசிரியர்,
லண்டன் மிஷன் டிரெயினிங் ஸ்கூல்,
ஈரோடு.

L. M. பில்கிங்டன் அச்சுக்கூடத்தில் H. A. டாப்லி என்பவரால் பிரசுரிக்கப்பட்டது.